பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 09 2025 SUNDAY 7.15 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஹிந்தி மொழி எந்த மொழிக்கும் எதிரானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிஜேபி, உலகின் மிகப் பெரிய அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

4. நேபாள வன்முறைச் சம்பவங்களில் உயிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அந்நாட்டின் இடைக்கால பிரதமர் திருமதி. Sushila Karki அறிவித்துள்ளார்.

5. துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manas Dhamne பட்டம் வென்றார்.

>>>>>>><<<<<<<

உலகில் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம், Mangaldoi பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுமார் 18 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்காக நாடு முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும், இந்த இலக்கை அடைவதில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இனிவரும் காலம், உலக அளவில் கிழக்கு நாடுகளுக்கானதாகவும், இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்களுக்கானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்துவதற்கான தூதர்களாக மக்கள் திகழ வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஊடுருவல்காரர்கள் வாயிலாக நாட்டின் நிலப்பரப்பை மாற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஹிந்தி மொழி எந்த மொழிக்கும் எதிரானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் ஹிந்தி தின கொண்டாட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர். இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் நட்பு மொழியாக ஹிந்தி திகழ்வதாக தெரிவித்தார்.

ஹிந்தி மொழியை எளிதில் படித்து புரிந்து கொள்ள மத்திய அரசு புதிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

ஹிந்தி மொழி பேச்சுமொழியாக மட்டுமின்றி, அறிவியல், தொழில்நுட்பம், நீதி மற்றும் காவல்துறையில் பெருமளவுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு உருவாக்கியுள்ள *Hindi Shabd Sindu Kosh* உலகின் மிகப்பெரிய கலைக்களஞ்சியமாக திகழும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

பிஜேபி, உலகின் மிகப் பெரிய அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பிஜேபியில் தற்போது 14 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளதாக கூறினார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க பிஜேபி தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் 11 ஆண்டுகால சாதனைகளால், பல்வேறு துறைகளிலும் நாடு வளர்ச்சியடைந்திருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மத்திய அரசு, மாநில அரசுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்

அம்மாநிலத்தில் மழையால் பாதிக்கப்பட்ட *Rupnagar* மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில பேரிடர் நிதியாக பஞ்சாபிற்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மத்திய குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு, கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

இதனிடையே, ஹரியானா மாநிலம், *Sirsa* மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த நிலக்கரித்துறை இணையமைச்சர் திரு. *Satish Chandra Dubey*, *Ghaggar* ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பயிர்கள் பெருமளவு சேதமடைந்திருப்பதாக தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய - மாநில அரசுகள் உறுதுணையாக இருக்கும் என்றும் திரு. *Satish Chandra Dubey* கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். சுந்தர், மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பிறப்பித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக, குவஹாத்தி உள்ளிட்ட இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஸ்ஸாமின் *Udalguri* பகுதியை மையமாக கொண்டு உருவான இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 5 புள்ளி ஒன்பதாக பதிவாகியுள்ளதாக அஸ்ஸாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் பூடான், பங்களாதேஷ் மற்றும் நேபாளத்திலும் உணரப்பட்டது.

>>>>>>><<<<<<<

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

*இந்த வரி குறைப்பின் மூலம், நடுத்தர வருவாய் பிரிவினரின் சொந்த வாகனக் கனவு நனவாகும் என்று தமிழகத்தின் சேலத்தை சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – பொதுமக்கள் 57 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<<*

*நேபாளத்தில் சமூகவலைதள கட்டுப்பாடுகளுக்கு எதிராக நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் உயிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அந்நாட்டின் இடைக்கால பிரதமர் திருமதி. Sushila Karki அறிவித்துள்ளார்.*

*வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின், உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைக்குப் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*இந்த சம்பவங்களில் காயமடைந்த காவல்துறையினர் உள்ளிட்ட அனைவரது மருத்துவச் செலவுகளை அரசே ஏற்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*போராட்டத்தின் போது ஏற்பட்ட சேத விபரம் குறித்த விரிவான அறிக்கையை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு திருமதி. Sushila Karki அறிவுறுத்தியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<<*

*சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manas Dhamne பட்டம் வென்றார்.*

*துனிஷியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 6-2, 6-0 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Cesar-ஐ வென்றார்.*

*>>>>>>><<<<<<<<*

*இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 282 ரன் எடுத்தால் வெற்றி இலக்குடன் பேட் செய்து வரும் ஆஸ்திரேலியா சற்றுமுன்வரை 25 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 157 ரன் எடுத்துள்ளது.*

*சண்டிகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முன்னதாக டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 281 ரன் எடுத்தது.*

*அதிகபட்சமாக Pratika Rawal 64 ரன் எடுத்தார்.*

*>>>>>>><<<<<<<<*

*உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Minakshi தங்கப்பதக்கம் வென்றார்.*

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 4-1 என்ற புள்ளிக்கணக்கில் கஸகஸ்தானின் Nazym Kyzaibay-ஐ வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி. ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

>>>>>>><<<<<<<<

உலக சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Jessie Philip-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Lingeshwara Rao - Suzanne இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Abhin Shyam, Philip Bency-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் Leena, Poonam-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Abhinand – Sangeetha இணையும் வெண்கலப்பதக்கம் வென்றன.

>>>>>>><<<<<<<<

ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென்னும், இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

>>>>>>><<<<<<<<

சீனாவின் Ningbo-வில் நடைபெற்று வரும் சர்வதேச துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் இந்தியாவின் Meghana Sajjanar வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா - உஸ்பெகிஸ்தானை வென்றது.

>>>>>>><<<<<<<<

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் உலக தடகள சாம்பியன் போட்டியின் உயரம் தாண்டுதலில் இந்தியாவின் Sarvesh Kushare இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>END<<<<<<<